(b) whether the list of books selected by them was altered later on?

பாட புத்தகக் குழு.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகப் பாடப் புத்தகக் குழுவின் உறுப்பினர்கள் யார், யார் ?

(இ) இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில புத்தகங்கள் பின்னர் மாற்றப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) தமிழ்நாட்டின் பாடப் புத்தகக் குழுவில் தமிழ்நாட்டின் மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் அல்லது அவர்களுக்காக அவர்களுடைய பிரதிநிதிகளும், ஒப்புதல் பெற்ற, கல்வி நிறுவனங்களில் உள்ள, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களும் உட்பட 25 உறுப்பினர்களுக்கு மேற்படாமல் உள்ளனர்.

(இ) இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏதேனும் விதி முறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கம் யார் யார் இப்படிப் பட்ட புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று ஏற்கெனவே கலந்து இந்த முடிவு எடுக்கிறோம்.

Writ Petitions

* 281 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the number of writ petitions filed in High Court from 6–3–1967 to the end of March 1968 against the orders of the Government of Tamil Nadu;

(b) the number of Government Orders which were stayed by the High Court on the writ petition; and

(c) the number of judgments which went against the Government?

ரிட் மனுக்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967 மார்ச் 6-ஆம் தேதி முதல் 1968 மார்ச் முடிய சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழக சர்க்கார் உத்திரவுகள் மீது போடப்பட்ட ரிட் மனுக்கள் எத்தனை ?

(இ) ரிட் மீது சர்க்கார் உத்தரவுகள் எத்தனை ஸ்டே செய்யப்பட்டன?

(உ) சர்க்காருக்கு விரோதமாக எத்தனை தீர்ப்புகள் செய்யப் பட்டன ?

[28th March 1969

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாநில அரசின் உத்தரவுகளை எதிர்த்து ஆண்டுதோறும் சராசரியாக 3,730 ரிட் மனுக்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. 1967 மார்ச்சிலிருந்து 1968 மார்ச்சு வரை தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள், உயர்நீதி மன்றம் தடை ஆணை விதித்த ரிட் மனுக்கள், அரசாங்க ஆணை செல்லுபடியாகாதென உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்ததற்குத் தொடர்புள்ள ரிட் மனுக்கள் ஆகியவற்றின் விவரம் கிடைக்கவில்லை. இந்த விவரங்களைத் திரட்டுவதற்குத் தனியாகப் பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்தத் தகவல்களைச் சேகரிப்பதற்குச் செலவிடப்படும் நேரமும், உழைப்பும் மிகுதி ; இதனால் பொது மக்களுக்குக் கிடைக்கும் பலன் மிகவும் குறைவு.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : We find that writ petitions are increasing day by day I am told that there are 15,000 petitions, at present pending before the High Court. As such, may I know, Sir, whether there is any proposal to appoint at least some retired judges temporarily to dispose of these pending write petitions? Otherwise, it will mean that justice is denied.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது கூட நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இரண்டு நீதிபதிகளை அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இந்திய நாடு முழுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் மாநிலத்தில் தான் விரைவாக நீதிமன்றங்கள் செயல்படுகின்றன என்பது தெரியும். அதிகமான அளவுக்கு நமது நீதிபதிகள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அதிக காலதாமதம் இல்லை என்று ஒப்புக்கொ கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : நீதி மன்றங்களில் வரப்பெற்றிருக்கிற ரிட் மனுக்களில் எந்த இலாகாவை எதிர்த்த மனுக்கள் அதிகமாக வந்திருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அடிப்படை உரிமை எந்தெந்த இலாகாவினால் புறக்கணிக்கப்படுகிறதோ அந்தந்த இலாகாவைச் சேர்ந்தவையாக இருக்கும்.

Vidwan Title of the Kerala University

*282 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that the Education Department has issued orders to the effect that the Tamil Vidwans graduated from Kerala University with several years of experience are unqualified for the post of Language Teacher though the actual qualification for the above post is a degree of any recognised University or Pandit Training of Annamalai University or any other Pandit Training according to Rule No. 13 of Madras Educational Rules?

கேரள பல்கலைக்கழக வித்வான் பட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

எம். இ. ஆர். 13-படி ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகக் கீழ்க் கலைப்பட்டமும் அண்ணாமலைப் பல்கலைக் கழக பண்டிட் பயிற்சி அல்லது பல்வேறு பண்டிட் பயிற்சி பெற்றிருந்தால் மொழியாசிரியராக வேலை பார்க்க தகுதி இருக்கிறது, என்றிருக்க இதற்குமாறாக கேரளப்பல்கலைக்